1972 ஆகஸ்ட் 12]

(இ) இப்புதிய திட்டத்தின் கீழ் பாசன பருத்திப் பயிருக்குக் கீழ் கண்ட அளவுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன:—

1 பூச்சி	மருந்துகட்கு	முதல் மூன்று மருந்து தெளிப்புகளுக்கு 25 சதவிகிதம் பின்னர் வரும் தெளிப்புகளுக்கு 12 தெளிப்பு வரை 33–1/3 சதவிகிதம்.
2 களைக்கொல்லி கட்கு.	மருந்து	33–1/3 சதவிகிதம்.
3 விசைத் களுக்கு.	தெளிப்பான்	தெளிப்பான் ஒன்றுக்கு 25 சதவிகிதம் ரூபாய் 200-க்கு மேற்படாமல்.
4 செயல்முறை களுக்கு.	விளக்கங்	அரை ஹெக்டேர் பாத்தி ஒன்றுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்து, முதலிய பொருள்களுக்கு முழு விலையாக ரூ. 200 மட்டும்.

** 111. வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவையில் பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் உள்ள பகுதிகளுக்கு எண்ட்ரீன், செவின் போன்ற மருந்துகள் சரிவர கிடைக்காமல் பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) பருத்தி சாகுபடி பாதிக்கப்பட்டதாக ஏதும் தகவல் இல்லை. பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகிப்பதில் கோவையில் செயல்பட்டு வரும் தீவிர சாகுபடித் திட்டத்திற்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இத்திட்ட நடைமுறையில் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான தேவை முக்கியமாக எண்ட்ரின், செவின் மருந்துகளுக்கு எதிர்பாராத அளவுக்கு அதிகமாகி உள்ளது. மேற்கண்ட மருந்துகள் தயாரிக்க தேவையான மூலப் பொருள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டி இருப்பதால் தேவையான மூலப்பொருள் கிடைக்கவில்லை. ஆதலால் விவசாயிகளுக்கு தேவையான அளவு வழங்க முடியவில்லை. ஆயினும் மேற் கூறிய மருந்துகட்கு ஈடாக ஈதைல் பாரத்தின், டி.டி.டி. 50 சத விதம் போன்ற மருந்துகளை தேவையான அளவிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்போது நம்முடைய பஞ்சாலைகளில், நெட்டிமைப் பருத்தியில்தான் அதிக லாபம் கிடைக்கிறது என்று சொல்

கிறார்கள். ஆகவே, பருத்தி சாகுபடிக்குத் தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது போல, நெட்டிமைப் பருத்தி விதைகளையும் இறக்குமதி செய்து, உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மூலக் கேள்விக்கும், அங்கத்தினர் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும், அவருடைய கருத்து அரசின் முயற்சியில் இருந்து வருகிறது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, எண்ட்ரின், செவின் மருந்துகள் பருத்தி சாகுபடிக்கு நல்லது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் பிளாக் டெவலப்மென்ட் அதிகாரிகள் ஸ்டாக் இல்லை, நல்லதல்ல என்று சொல்கிறார்கள். மதுரையில் சில இடங்களில் இந்த மருந்துகள் கிலோ 17½ ரூபாய்க்கு தனிப்பட்ட வியாபாரிகளால் விற்கப்படுகிறது. ஆனால் அரசாங்க விலை 10 ரூபாய் தான். தனிப்பட்டவர்களிடம் இந்த மருந்து வகைகள் கிடைக்கின்றன. அரசாங்க அலுவலகங்களில் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அதன் மர்மம் என்ன என்று அரசாங்கம் அறியுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தவிதமான குறைகள் இதுவரை அரசுக்கு வரவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

டிராக்டர்கள் வழங்கல்

* 112. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் 1971-72-ம் ஆண்டில் டிராக்டர்கள் கோரி எத்தனை பேர் பதிவு செய்து கொண்டார்கள்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு டிராக்டர்கள் கொடுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) 756 பேர்கள் பதிவு செய்துகொண்டார்கள்.

(இ) 616 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த டிராக்டர்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : விவசாயிகளின் விண்ணப்பங்களின் தகுதியைப் பார்த்து வழங்கப்படுகின்றன.